சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ம் நாள் திங்கட்கிழமை

**இ.நி.ம.எண்.02/2026**

**இன்**

**அசல் வழக்கு எண்.224/2019**

குன்னா (எ) அன்வர் பாஷா .... மனுதாரர்/பிரதிவாதி

**// எதிராக //**

சிகாமணி .... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 09.03.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.காந்தி,பி.காம்.,எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.கணேசன்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மேற்படி தாவாவில் இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்: -**

(i) தான் இம்மனுவில் மனுதாரர், தாவாவில் பிரதிவாதி என்றும், மேற்படி



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.09 17:18:33 +0530

எதிர்மனுதாரர் தன் மீது சமூகம் நீதிமன்றத்தில் விளம்புகை, சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாவா தாக்கல் செய்து மேற்படி தாவா தற்பொழுது தனது தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஒருசில முக்கியமான ஆவணங்கள் இன்றுதான் கிடைக்க பெற்றேன் என்றும், மேற்படி ஆவணங்களை சமூகம் கோர்ட்டில் இன்றே தாக்கல் செய்கிறேன் என்றும், மேற்படி ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து ஏற்க வேண்டியது அவசியமாகிறது என்றும், எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகும் என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர்/பிரதிவாதி தனது மனுவில் கூறியுள்ளார்.

3. **<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>** :-

(i) மனு பொய்யானதும், தவறானதும், உண்மைக்கும் மாறானதும், சட்டப்படியும், நியாயபடியும் செல்லகூடியது அல்ல. மனு முதல் நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மனு சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக்கொள்பவைகளை தவிர மற்றவைகள் யாவும் பொய்யானதும், தவறானதும், உண்மைக்கு மாறானதும் ஆகும். அவைகளை மனுதாரரே மெய்ப்பிக்க வேண்டியதாகும்.

(ii) மேற்படி வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஒரு சில முக்கியமான ஆவணங்கள் இன்று தான் கிடைக்கப்பெற்று சமூகம் கோர்ட்டில் இன்றே தாக்கல் செய்கிறார் என்பதும்,மேற்படி ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென்பதும் தவறானதும், பொய்யானதும், உண்மைக்கு மாறானதுமாகும்.

(iii) மனுதாரர் தற்போது ஒப்படைக்கும் ஆவணங்கள் வழக்கிற்கும்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.09 17:18:35 +0530

சம்மந்தப்பட்டவைகள் அல்ல, வழக்கு சொத்திற்கும் சம்மந்தப்பட்டவைகள் அல்ல. பிரதிவாதிக்கு அரூர் புது சந்தை மேடு 1-வது வார்டிலும், அரூர் மேல்பாட்சாபேட்டை 6-வது வார்டிலும் வீடுகள் உள்ளது. அந்த வீடுகளுக்கு சம்மந்தப்பட்ட வீடு வரி ரசீதுகள் தான் மனு 4 முதல் 10 ஆவணங்களாகும்.

(iv) தாவா சொத்தை ஒட்டி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 5 அடி அகல மனை அதில் கட்டியுள்ள கட்டிடம் உள்ளது. அந்த சொத்திற்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் தான் மனு 1,2,3,11 ஆவணங்களாகும். அந்த ஆவணங்கள் வழக்கிற்கும், வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லாதவைகள் ஆகும். மனு 4 முதல் 10 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்களாகும். வழக்கிற்கு பின்னிட்டு ஆவணங்களை எவ்வகையிலும் ஏற்க இயலாததாகும். மனுவில் மனுதாரருக்கு எவ்வித தகுதிப்பாடும் இல்லை. ஆகவே கனம் கோர்ட்டாரவர்கள் தயவுசெய்து மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர்/வாதி தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** <u>:-</u>

**5.** மேற்படி தாவாவில் இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**6.** மனுதாரர்/பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்/வாதி எதிருரையில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.09 17:18:38 +0530

கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, பிரமாண வாக்குமூலம், பதிலுரை, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/பிரதிவாதி தான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், மேற்படி எதிர்மனுதாரர் தன் மீது சமூகம் நீதிமன்றத்தில் விளம்புகை, சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாவா தாக்கல் செய்து மேற்படி தாவா தற்பொழுது தனது தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஒருசில முக்கியமான ஆவணங்கள் இன்றுதான் கிடைக்க பெற்றேன் என்றும், மேற்படி ஆவணங்களை சமூகம் கோர்ட்டில் இன்றே தாக்கல் செய்கிறேன் என்றும், மேற்படி ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து ஏற்க வேண்டியது அவசியமாகிறது என்றும், எனவே, கனம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்று தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகும் என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

**7.** எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், மேற்படி வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஒரு சில முக்கியமான ஆவணங்கள் இன்று தான் கிடைக்கப்பெற்று சமூகம் கோர்ட்டில் இன்றே தாக்கல் செய்கிறார் என்பதும்,மேற்படி ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென்பதும் தவறானதும், பொய்யானதும், உண்மைக்கு மாறானதுமாகும் என்றும், மனுதாரர் தற்போது ஒப்படைக்கும் ஆவணங்கள் வழக்கிற்கும் சம்மந்தப்பட்டவைகள் அல்ல, வழக்கு சொத்திற்கும் சம்மந்தப்பட்டவைகள் அல்ல என்றும், பிரதிவாதிக்கு அரூர் புது சந்தை மேடு 1-வது வார்டிலும், அரூர்



R
VIJAYAN
Digitally signed
by R VIJAYAN
Date:
2026.03.09
17:18:41 +0530

மேல்பாட்சாபேட்டை 6-வது வார்டிலும் வீடுகள் உள்ளது என்றும், அந்த வீடுகளுக்கு சம்மந்தப்பட்ட வீடு வரி ரசீதுகள் தான் மனு 4 முதல் 10 ஆவணங்களாகும் என்றும், தாவா சொத்தை ஒட்டி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 5 அடி அகல மனை அதில் கட்டியுள்ள கட்டிடம் உள்ளது என்றும், அந்த சொத்திற்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் தான் மனு 1,2,3,11 ஆவணங்களாகும் என்றும், அந்த ஆவணங்கள் வழக்கிற்கும், வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லாதவைகள் ஆகும் என்றும், மனு 4 முதல் 10 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்களாகும் என்றும், வழக்கிற்கு பின்னிட்டு ஆவணங்களை எவ்வகையிலும் ஏற்க இயலாததாகும் என்றும், மனுவில் மனுதாரருக்கு எவ்வித தகுதிப்பாடும் இல்லை என்றும், ஆகவே கனம் கோர்ட்டாரவர்கள் தயவுசெய்து மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**8.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை, சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது தற்பொழுது மனுதாரர்/பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஒரு சில முக்கியமான ஆவணங்கள் இன்று தான் கிடைக்க பெற்றது என்றும், எனவே அதனை ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர் தற்போது ஒப்படைக்கும் ஆவணங்கள் வழக்கிற்கும் சம்மந்தப்பட்டவைகள் அல்ல என்று வாதிடப்பட்டது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் வழக்கிற்கு தொடர்புள்ளதாக இருக்கும்போது அந்த ஆவணத்தை பெற்று வழக்கில் ஆவணங்களாக குறியீடு செய்தால் மட்டுமே அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்கு ஏற்புடையதா?



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.03.09 17:18:44 +0530

இல்லையா? என்பதை முடிவு செய்ய முடியும். தற்போதைய நிலையிலேயே மனுவை நிராகரிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக**, மேற்படி தாவாவில் இன்று தாக்கல் செய்யும் ஆவணங்களை ஒப்படைக்க ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்று குறியீடு செய்துகொள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.03.09 17:18:47 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>** : -

-- இல்லை -

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.03.09 17:18:49 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.